National Executing Agency
Department of Personnel & Training
Government of India, New Delhi - 110 067

District Implement Agency
District Collectorate
Nagapattinam - 611 001.

# தகவல் பெறும் உரிமை சட்டம்

# கையேடு



## நாகப்பட்டினம் மாவட்டம்

Core Funding Agency
United Nations Development Programme
New Delhi - 110 003.

State Implementing Agency,
Anna Institute of Management,
Chennai - 600 028.

**ச. முனியநாதன்,** இ.ஆ.ப.,

மாவட்ட ஆட்சித் தலைவர்,

நாகப்பட்டினம்.

நாகப்பட்டினம் மாவட்டம், தகவல் அறியும் உரிமை சட்டம் கையேடு அச்சிடப்படுவது குறித்து எனது இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - அறிவுடைமை 423.

என்பது திருவள்ளுவர் வாக்கு. குடத்துக்குள் இட்ட விளக்காக இருக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பற்றிய விளக்கங்களை இந்த நூலில் வெளியிட்டிருப்பது உயர்ந்த இடத்தில் எரியும் கலங்கரை விளக்கம் போன்றது, பாராட்டுக்குரியது. எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் நாகப்பட்டினம் மாவட்ட மக்களுக்காக இப்படி ஒரு நூல் வெளியிட்டிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். நாகப்பட்டினம் மக்கள் அனைவரும் இதன் மூலம் பெரும் பயன் அடைய வேண்டும் என் இனிய அவா.

நெஞ்சார்ந்த வாழ்த்துடன்,

***மாவட்ட ஆட்சித்தலைவர்.***



**திரு.ஆ. அண்ணாதுரை,** பி.இ.,
மாவட்ட வருவாய் அலுவலர்,
நாகப்பட்டினம்.

அன்பிற்கினியவர்களே

அறிவு என்பது ஒரு மிகப்பெரிய ஆற்றல். நவீன உலகத்தில் அவ்வறிவினைப் பெறுவதற்கு பல வழிகள் இருந்தாலும், தகவல் அறியும் உரிமைச்சட்டம் அதற்கு பேருதவியாக இருக்கும். உலகம் ஒரு கிராமமாக தொலை தொடர்பில் சுருங்கிக்கொண்டிருக்கும் பொழுது நாமும் மக்களுக்கு தேவையான தகவல்களை அளித்து நெருக்கத்தை மேம்படுத்திக்கொள்ள இச்சட்டம் உதவியாய் இருக்கும்.

*எல்லோரும் இந்தியர்,*
*எல்லோரும் ஓர் இனம்,*
*எல்லோரும் ஓர் நிறை*

என்ற மேலோங்கிய சிந்தனையில் எல்லோருக்கும் தகவல் என்ற மணிமகுடம் சேர்ந்துள்ளமைக்கு வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(மாவட்ட வருவாய் அலுவலர்)